| Scale | Am | Tempo | 93 | Style | Latin > Mambo |
|---|---|---|---|---|---|

60. உலகத்தின் பாவத்தை

1

உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க வந்த
தேவ ஆட்டு குட்டி நீர் அல்லவா (யோவான் 1:29)
உன்னத தேவனின் குமாரனன்றோ - நீர்
தாவீதின் சிங்காசனம் பெற்றவர் (லூக்கா 1:32)
நொருக்கப்பட்டீர் நீர் காயப்பட்டீர் (ஏசாயா 53:5)
கோர சிலுவைதனில் பலி ஆனீரே - இந்த (எபி 10:10)
உலகத்தின் இரட்சகர் இயேசுவே நீர் (லூக் 2:11)

பல்லவி

தொழுதிடுவோம் உம்மை வாழ்த்திடுவோம்
துதித்திடுவோம் உம்மை போற்றிடுவோம்
உம்மையே சேவிப்போம் உமக்காய் ஓடிடுவோம்
எம்மை அற்பணித்தோம் உந்தன் சேவை செய்ய

2

நசரேயனாகிய என் இயேசுவே - நீர்
யூதரின் ராஜாவாய் இருப்பவரே (யோவான் 19:19)
மனுஷரை பிரகாசிக்கச் செய்திடவே – நீர்
மெய்யான ஒளியாக வந்தீரையா (யோவான் 1:9)
சிவப்பங்கி முள்முடி தரித்தவராய் (யோவான் 19:5)
வாரினால் அடிகளை ஏற்றுக்கொண்டீர் - நாங்கள்(மத் 27:26)
சாபங்கள் நீங்கியே வாழ்ந்திடவே

3

நானே வழி, சத்யம், ஜீவன் என்றீர் - உம்மை
அல்லாமல் ஒருவனும் பிதாவைச் சேரான் (யோவான் 14:6)
நானே மெய் திராட்சச்செடி என்றவர் - உம்மை
அல்லாமல் ஒன்றும் செய்யக்கூடதே யோவான் 1:1)
கசப்பான காடியை கொடுத்தனரோ மத் 27:34
விலாவிலே ஈட்டியால் குத்திடவே - இரத்தம்
வெள்ளம் ஈந்தீர் எம்மை சுத்தி செய்ய (யொவான் 19:34)